**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 422/2024**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 21.01.2026.**

| | |
|---|---|
| **Name : பழனிகவுண்டர்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் அரியாம்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். எனக்கும் சின்னாகவுண்டர் என்பவருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 4 வருடத்திற்கு முன்பாக மதியம் 1 மணிக்கு மேல் நான் பருத்தி காட்டில் இருந்த போது என்னுடன் என் மனைவி ரத்தினம் ஆகியோர் பருத்தி காட்டை கொத்திக் கொண்டிருந்தோம். அப்போது சின்னாகவுண்டர் வந்து கற்களை எடுத்து காட்டிற்குள் கரை போட்டார். நடுவில் ஏன் போடுகிறாய் என்று கேட்டோம். பிறகு என்னை கீழே தள்ளி மமுட்டியால் இரு கால்களிலும் முழங்காலுக்கு கீழ் அடித்து காயம் ஏற்படுத்தினார்.

2) மமுட்டியை தூக்கி வீசிவிட்டு சின்னாகவுண்டர் சென்றுவிட்டார். மணி என்பவர் என்னை ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். தன்னை அடித்ததாக சொல்லி சாட்சி திறந்த

நீதிமன்றத்தில் மமுட்டியை அடையாளம் காட்டினார். மமுட்டி **சா.பொ. 1** ஆகும். ஆஜர் எதிரி தான் என்னை அடித்தார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) புகார் வாக்குமூலத்தில் நான் ரேகை வைத்தேனா என்றால் ஆமாம். அதில் எழுதியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த போது என் மனைவி, நான், எதிரி ஆகியோரை தவிர வேறு யாரும் இல்லை என்றால் ஆமாம். சம்பவம் நடந்து எவ்வளவு நேரம் கழித்து மணி என்பவர் வந்தார் என்றால் 10 நிமிடம் கழித்து வந்தார். என் மனைவி தான் மணியை அழைத்து வந்தார்.

4) அங்கிருந்து இரு சக்கர வாகனத்தில் நானும் மணி என்பவரும் நேராக ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சென்றுவிட்டு அங்கிருந்து ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். அங்கு மருத்துவர்கள் இல்லை என்று சொன்னதால் அங்கிருந்து ஓமலூர் சென்றோம். ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் சுமார் 5.30 மணிக்கு சென்றோம். ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து நேரடியாக ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு தான் சென்றோம். 1 மாதம் நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் தான் இருந்தேன்.

5) சா.பொ.1 யை நான் போலீசாரிடம் அடையாளம் காட்டினேனா என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் அடையாளம் காட்டவில்லை. போலீசாரிடம் யார் அடையாளம் காட்டினார்கள், யார் முன்னிலையில் போலீசார் எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக அனைத்து மமுட்டிகளும் ஒரே மாதிரியாக தான் இருக்கும் என்றால் ஆமாம். குறிப்பாக இந்த மமுட்டியால் தான் அடித்தார் என்று எவ்வாறு குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் இதே மாதிரியான மமுட்டியில் தான் எதிரி என்னை அடித்தார்.

6) இதே மாதிரி தான், இது தான் என்று உறுதியாக சொல்ல முடியாது என்றால் சரிதான். ஆஜர் எதிரி சின்னாகவுண்டர் எனக்கு என்ன உறவு என்றால் என்

சித்தப்பா மகன் ஆவார். என் விவசாய நிலமும், எதிரியின் விவசாய நிலமும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எதிரி அவர் விவசாய நிலத்திற்கு அளவு கல் நடப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். அவருக்கு என்று வரும் பாகத்தில் பருத்தி போடப்பட்டிருந்தது என்றால் இல்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தனரா என்றால் இல்லை. மமுட்டியால் அடித்ததில் எனக்கு வெளிக்காயம் ஏற்பட்டதா என்றால் ரத்த காயம் முழங்காலுக்கு கீழ் இரு கால்களிலும் ஏற்பட்டது.

7) ஜலகண்டாபுரத்திலிருந்து ஓமலூருக்கு எவ்வளவு கிலோமீட்டர் தூரம் என்றால் என்னால் சொல்ல முடியாது. 1 மணிக்கு சம்பவம் நடந்த நிலையில் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு மாலை 7.30 மணிக்கு சேர்ந்ததாக மருத்துவ குறிப்பில் உள்ளது என்றால் ஜலகண்டாபுரம் காவல் நிலையம் மற்றும் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றதால் அவ்வளவு நேரம் ஆனது. அவ்வளவு நேரமும் காலில் ரத்தம் வந்ததா என்றால் ஆமாம். ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வரை ரத்தம் வந்தது அங்கு சென்று தான் முதலுதவி சிகிச்சை செய்தோம்.

8) நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில், சொல்லும் நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் ஆஜர் எதிரி என்னை மமுட்டியால் அடிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரியின் நிலத்தை நான் சேர்த்து விவசாயம் செய்ததால் அவர் என்னிடம் என் விவசாய நிலத்தில் ஏன் விவசாயம் செய்கிறாய் என்று கேட்டதற்கு நான் தான் அவரை அடித்துவிட்டு அவர் மீது தவறுதலாக புகார் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் நான் என் நிலத்தில் களை எடுத்துக் கொண்டிருக்கும் போது நிலைதடுமாறி அங்கிருந்த கல்லின் மேல் விழுந்ததால் ஏற்பட்ட காயமாகும் என்றும் உண்மையில் எதிரி என்னை அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியிருந்தால் நான் உடனடியாக மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்திலிருந்து சுமார் 5 மணி நேரம் கழித்து நான்

மருத்துவமனைக்கு சேர்ந்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. எதிரி மீது தவறுதலாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 422/2024**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 21.01.2026.**

| | |
|---|---|
| **Name : ரத்தினம்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் அரியாம்பட்டி கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 என் கணவர் ஆவார். எதிரியை எனக்கு தெரியும். எனக்கும் சின்னாகவுண்டர் என்பவருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது. கடந்த 4 வருடத்திற்கு முன்பாக காலை 9 மணிக்கு மேல் அ.சா.1 எங்கள் காட்டில் ஆடு மேய்த்து கொண்டிருந்தார். எதிரி கரை போடுவதற்காக கல்லை தள்ளி கொண்டிருந்தார். இது பற்றி அ.சா.1 கேட்ட போது எதிரி வருடம் முழுவதும் பிரச்சனை செய்ய முடியவில்லை என்று சொல்லி கீழே தள்ளிவிட்டு என் கணவர் கீழே விழுந்தவுடன் மமுட்டியை எடுத்து இரு முழங்காலுக்கு கீழ் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தினார்.

2) நான் வீட்டிலிருந்து வெளியே வந்து பார்த்த போது என் கணவரின் இரு கால்களிலும் எதிரி மமுட்டியை எடுத்து அடித்ததை நான் நேரில் பார்த்தேன். ஆஜர் எதிரி தான் என் கணவரை அடித்தார் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். என் கணவரை அடிக்க பயன்படுத்திய மமுட்டியை சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. ஆனால் வந்து பார்த்துவிட்டு சென்றுவிட்டார்கள். என் கணவர் அடிப்பட்டவுடன் மருத்துவமனைக்கு யார் அழைத்து சென்றது என்றால் நான் சத்தம் போடுவதை கேட்டு அ.சா.1ன் அண்ணன் மகன் மணி என்பவர் வந்தார். அவர் அ.சா.1யை தூக்கி பார்த்து தூக்க முடியாததால் என் தம்பி மகன் கௌரி சங்கர் என்பவரை தொலைபேசி மூலமாக அழைத்தார். அ.சா.1யை மணி மற்றும் கௌரி சங்கர் இருவரும் இரு சக்கர வாகனத்தில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர்.

4) மருத்துவமனைக்கு செல்லும் வழியில் ஜலகண்டாபுரம் காவல் நிலையம் சென்றார்களா என்றால் காவல் நிலையம் செல்லவில்லை. ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் ஆகாது என்று சொன்னதால் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அ.சா1.க்கு வெளிக்காயம் ஏற்பட்டு ரத்தம் ஏதாவது வந்ததா என்றால் வெளிக்காயம் எதுவும் ஏற்படவில்லை. காலில் எலும்பு முறிந்துவிட்டது.

5) அ.சா.1 இரண்டு மாதம் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தார். நான் வீட்டிற்குள் சமைத்துக் கொண்டிருந்தேன். சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தேன். காட்டிற்கும், வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் மேல் அனப்பில் வீடு உள்ளது. கீழ் அனப்பில் இடம் உள்ளது. சத்தம் கேட்டு நான் வந்து பார்க்கும் போது அ.சா.1 கீழே கிடந்தார். எதிரியை அவர் மகன் வந்து அழைத்து சென்று கொண்டிருந்தார்.

6) மமுட்டியை போலீசார் எடுத்துச் செல்லவில்லை. போலீசார் வந்த சமயத்தில் மமுட்டி அங்கு இல்லை. சம்பவயிடத்திலிருந்து எதிரியின் மனைவி மமுட்டியை எடுத்து சென்றுவிட்டார். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 ல் தான் எதிரி அ.சா.1யை அடித்தாரா என்றால் இதே மாதிரி மமுட்டியில் தான் அடித்தார். நான் சொல்வது போல் சொல்லும் நேரத்தில் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரியின் இடத்தை என் கணவர் அ.சா.1 அபகரிக்க நினைத்ததால் எதிரியின் மீது அ.சா.1 தவறுதலாக புகார்

அளித்துள்ளார் என்றும் அவருக்கு ஆதரவாக நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் அவர் காட்டில் நிலைதடுமாறி கல்லின் மேல் விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.